# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

அல் - ஹுஜுராத்:

புறங்கூறுதல் (பகுதி 1)

13 SEPTEMBER 2019

(13 MUHARRAM 1441 AH)


ஹஸ்ரத் முஹையுதீன் அல் கலீஃ.பத்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)



வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

Phone No:- 917502272774

# AL – Hujurat : Ghibbat (Part 1)

அல் - ஹுஜுராத்: புறங்கூறுதல் (பகுதி 1)

---

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தஷஹுத், தஅவ்வுசு மற்றும் அல்.'.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.'.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையியை ஆரம்பித்தார்.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱجۡتَنِبُواْ كَثِيرٗا مِّنَ ٱلظَّنِّ إِنَّ بَعۡضَ ٱلظَّنِّ إِثۡمٞۖ وَلَا تَجَسَّسُواْ وَلَا
يَغۡتَب بَّعۡضُكُم بَعۡضًاۚ أَيُحِبُّ أَحَدُكُمۡ أَن يَأۡكُلَ لَحۡمَ أَخِيهِ مَيۡتٗا فَكَرِهۡتُمُوهُۚ
وَٱتَّقُواْ ٱللَّهَۚ إِنَّ ٱللَّهَ تَوَّابٞ رَّحِيمٞ ١٢

**"நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அதிகமான யூகங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில் சில யூகங்கள் பாவமாகும். பிறர் குற்றங்களைத் தேடியலையாதீர்கள். உங்களுள் ஒருவருக்கொருவர் புறங்கூறாதீர்கள். உங்களுள் எவராது மரணமடைந்து விட்ட தம ˙ சகோதரரின் மாமிசத்தை உண்ண விரும்புவாரா? (உங்களைக் குறித்து இவ்வாறு கூறப்பட்டால்) நீங்கள் நிச்சயமாக அதனை வெறுப்பீர்கள் மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அல்லாஹ் அதிகமாகக் கழிவிரக்கத்தை ஏற்றுக்கொள்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (49:13)**

சூரத்துல் ஹுஜுராத்தைப் பற்றியும், கிப்பத் குறித்தும் கடந்த காலங்களில் பல பிரசங்கங்களை நான் கொடுத்திருந்தேன். இருப்பினும் மீண்டும் அதே தலைப்பை அடிப்படையாகக் கொண்டு இன்று நான் உங்களிடத்தில் உரையாற்ற எண்ணுகிறேன்.

இது தொடர்பாக நான் இன்று உங்கள் முன் மற்றொரு விளக்கத்தை சமர்பிக்கிறேன். இந்த சூரா மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சூரத்தாகும். ஏனெனில் இச்சூரத்து மூலமாக அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் சமூகத்தை அழைத்து, கீப்பத்துக்கு எதிராக எச்சரிக்கையாக இருக்கும்படி கவனமூட்டுகிறான். உங்களுக்கு தெரிவதுப் போல, கீப்பத்து என்பதன் அர்த்தம் புறங்கூறுதல், ஒரு நபருக்கு எதிராக

பேசுதல், அவரது முதுகுக்குப் பின்னால் அதாவது அவர் இல்லாதபோது அவரை மோசமாக சித்தரித்தல் போன்றவையாகும். இத்தகைய நடைமுறையை அல்லாஹ் கடுமையான வார்த்தைகளில் கண்டித்துள்ளான். மக்கள் அவற்றை பற்றி நன்கு உணர்ந்து கொண்டால், அவர்கள் ஒரு போதும் இத்தகைய செயல்களில் ஈடுபட துணியமாட்டார்கள். மேலும் இது தொடர்பாக அல்லாஹ் மிக ஆழமாக விளக்கமளித்திருப்திலிருந்து நமக்கு ஒரு கருத்தைப் பெறலாம், அதாவது மக்கள் ஏன் இத்தகைய வெறுக்கத்தக்க நடைமுறைகளில் ஈடுபடுகின்றனர்!

கீப்பத் என்பது ஒரு தீமையாகிறது, அது உங்களை அதன்பால் ஈர்த்துக் கொள்கிறது. நீங்கள் பலவீனமடைந்து அதில் வீழ்ந்து விடுகின்றீர்கள். அல் ஹுஜுராத் என்ற அத்தியாயத்தைப் பற்றி நீங்கள் நுட்பமாக படித்துக்கொண்டால், அதன் உள்ளடக்கங்களை கண்டு நீங்கள் அஞ்சி நடுங்கிவிடுவீர்கள். அதாவது அல்லாஹ் இறை நம்பிக்கையாளர்களுக்கு எதிராக எதனைக் கொண்டு எச்சரித்துள்ளானோ அதன் காரணமாக நீங்கள் பயந்து விடுவீர்கள். இந்த அத்தியாத்தைப் பற்றி நான் ஆழமாக படித்துப் பார்த்தப் பொழுது, அதைக்குறித்து நுட்பமாக சிந்தித்தபோது, அஹ்மதியாவின் பெயர் தாங்கிய முன்னாள் அமீர் அமீன் ஜோவாஹீர் மற்றும் அவரது நீர்வாக குழுவும் அந்நேரத்தில் வெளிப்படுத்திய பொறாமைகளும் சந்தேகங்களும் வளர்ந்து எனக்கு எதிராக பெரிய பகைமையாக மாறிவிட்டதையும் நான் நினைவுகூர்ந்தேன். மேலும் அந்த பகைமையானது வளர்ந்து வளர்ந்து மற்றவர்களிடத்திலும் (சிறு குழந்தைகளிடம் கூட) பரவியது. அதன் விளைவாக அவர்கள் இதயங்கள் தீமைகளால் இருளாகிவிட்டன. அந்த இருள் அவர்களின் முகங்களிலும் பிரதிபலித்தது. அவர்கள் எனக்கு எதிராக தவறான வசைமொழிகளைப் பயன்படுத்தினர், மேலும் வெறுக்கத்தக்க செயல்கள் மற்றும் தடைகளை ஏற்படுத்தினர். **2000—ம் ஆண்டில் பெயர் தாங்கிய முன்னாள் அமீரின் சொந்த அறிக்கையின் அடிப்படையில் அஹ்மதியா இயக்கத்தின் நன்காவது கலீ.்.பா எனது கூற்றை கேட்காமலேயே என்மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார். அதன் முடிவில் எங்கள் மீது அவர் சாபங்களை கொட்டியதுடன் வெறுக்கத்தக்க மற்றும் கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தினார். உண்மையில் எங்களுக்கு எதிராக அவர் தக்வா (நீதி/இறையச்சம) இன்றி செயல்பட்டார்.**

அல்லாஹ் எனக்கு வழங்கிய சில வெளிப்பாடுகளை நான் மேற்கோள் காட்டியதால் மட்டுமே இவையனைத்தும் நிகழ்ந்தன. அவர் என்னுடன் ஒரு முபாஹிலாவை செய்கிறார் என்பது போன்ற தரத்தில் ஒரு சாப பிரார்த்தனையை அனுப்பினார். பெயர் தாங்கிய

முன்னாள் அமீரை பொறுத்தவரை அவர் தன்னை ஒரு சிறந்த ஹீரோவாக காட்டிக் கொண்டு வெள்ளிக் கிழமை சொற்பொழிவுகளுக்கு மேல் சொற்பொழிவுகளை கொடுத்து எங்கள் மாமிசத்தை மிகுந்த பசியுடன் புசித்தார் (புறங்கூறுதல்). எங்களுக்கு எதிராக வதந்திகள் மற்றும் புறங்கூறுதல்களை அவர்கள் தொடர்ந்தனர். 2001 - ஆம் ஆண்டு மற்றும் அதற்கு பிந்தய காலமும் இத்தகைய செயல்களை அவர்கள் தொடர்ந்தனர். இதுபோன்ற புறம்பேசுதலானது வெள்ளிக்கிழமை பேருரைகளில் மட்டுமல்லாது எல்லா கிளைகளின் கூட்டங்களிலும், மஸீஹை மௌஊத் தினம், முஸ்லீஹ் மௌஊத் தினம் மற்றும் கி.ஃலாபத் தினம் போன்ற நிகழ்ச்சிகளிலும் கூட நடந்தேறியது. **இக்கூறப்பட்ட இந்த நாட்கள் அனைத்துமே முனீர் அஸீம் தினமாக மாறியது.** குதாம் இஜ்ஜித்துமாக்கள், அன்ஸாறுல்லாஹ் இஜ்ஜித்துமாக்கள், ஜல்சா சால்னாக்கள் போன்ற எல்லா நிகழ்ச்சிகளிலும் முனீர் அஸீம் பேச்சுகள் மட்டுமே இருந்தன.

சுருக்கமாக கூறுவோமேயானால் முனீர் அஸீம் மற்றும் அவரது வெளிப்பாடுகளைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படாத எந்த நிகழ்ச்சியும் அஹ்மதியா ஜமாஅத்துகளில் நடைபெறவில்லை. அவர்களைப் பொறுத்தவரை இது மிக முக்கியமான ஒரு தலைப்பாக இருந்தது. எடுத்துக்காட்டாக முனீர் அஸீம் எப்படி ஒரு கிளர்ச்சியாளராக மாறிவிட்டார்? இக்காரியத்தில் பெயர் தாங்கிய முன்னாள் அமீர் எந்த அளவு தாழ்ந்த நிலையை சென்றடைந்தார் என்றால், அவர் தனது முல்லாக்களுடன் சேர்ந்துக் கொண்டு கில.ஃாபத் அபாயத்தில் இருப்பதாக பிரச்சாரம் செய்தார். அவர்கள் அஹ்மதிகளின் (ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின்) இதயங்களில் பகைமையை உருவாக்கினர். மார்க்கத்துறையில் அனைத்து வரம்புகளையும் அவர்கள் மீறிக்கொண்டனர். அவர்கள் அவர்களின் ஆட்களில் வெறுப்பை உருவாக்கினர். அவர்கள் கி.ஃலாபத் எங்கள் வாழ்வாகும் என்ற சுலோகத்துடன் நிலைகொண்டனர். மேலும் அவர்கள் புசித்த அவ்விஷத்தால் போதையடைந்து, கலீ.ஃபாவுக்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்களை கொன்று விடுவதாக அறிக்கை விடுக்கவும் தயாராகிவிட்டனர். அந்த பெயர் தாங்கிய முன்னாள் அமீர், ஜமா அத்தின் உறுப்பினர்களிடமிருந்து பல பாராட்டுகளைப் பெற்றார். கிலா.ஃபத்தை காப்பாற்றுவதில் அவர் வெற்றி பெற்றதற்காக பாராட்டுதல்கள் குவிந்தன.

**எனவே ஒருவரையொருவர் செய்த அனைத்து தரப்பட்ட புறங்கூறுதல் மற்றும் வதந்திகளுடன் கூடிய அந்த வீண் பேச்சுக்களையே ஒரு கலீ.ஃபா நம்பினார், எனது பேச்சை கேட்கவேயில்லை, ஆகவே இப்போது அஹமதியா ஜமா அத் எங்கே சென்றுக்**

**கொண்டிருக்கிறது என்பதைப் பாருங்கள்...... அனைத்தையும் அது இழந்து விட்டது. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமா அத்திலிருந்து அல்லாஹ்வின் ஒளி மறைந்து விட்டது. எனக்கு உறுதியுடன் கூறமுடியும் 90% அஹ்மதிகளும் எங்களுக்கு எதிராக இதயத்தில் வெறுப்பைக் கொண்டுள்ளனர். இந்த வெறுப்பானது அவர்களின் இதயங்களை கறுப்பாகி விட்டது. அவர்களின் அணுகுமுறைகள் மிக மோசமான நிலையை சென்றடைந்துள்ளது. அவர்களின் அணுகுமுறைகளில் சற்றும் நன்மையை பார்க்க முடியாது. உண்மையில் இருளில் சிக்கிகொண்ட ஒரு கருப்பு கல்லைப்போன்று அவர்களின் இதயங்கள் முழுமையாக இருளால் நிரம்பியுள்ளது.**

எனவே தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஜமா அத்தே அஹ்மதியாவை பாருங்கள். அவர்களுக்கு இனிமேல் இஸ்லாமிய போதனைகளை பின்பற்ற முடியாது. வாக்களிக்கப்பட்ட மஸ்ஹின் போதனைகளைக் கூட பின்பற்ற அவர்களுக்கு இயலாது ஏனெனில் அவர்கள் தங்கள் கலீஃபாவை ஒரு சிலையாக மாற்றிக் கொண்டனர். மேலும் இறைப் போதனைகளை அவர்கள் எட்டி மிதிக்கின்றனர். அவர்களில் இப்போது எஞ்சியிருப்பதோ புறங்கூறுதலும் வெறுப்பும் மட்டுமே!

மறுபுறம் தக்வா கொண்ட மக்கள், அதாவது அல்லாஹ்வை அஞ்சுகின்றோர்கள் நிச்சயமாக அல்லாஹ்வின் ஏகத்துவத்தில் உறுதியாக நம்பிக்கை கொள்பவர்களாக இருக்கின்றனர். மேலும் அவர்கள் இந்த கலீஃபா சிலை வழிபாடு, புறகூறுதல், பொறாமை போன்றவற்றிலிருந்து சுயமாக விலகி கொள்கின்றனர். அவர்கள் வம்சவழியிலான மற்றும் குடும்ப உணர்வு கொண்ட இந்த ஜமாஅத்தை விட்டு வெளியேற விரும்புகின்றனர். ஏனெனில் அங்கு குடும்ப உணர்வு மட்டுமே காணப்படுகிறது. எல்லா நேரங்களிலும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் மட்டும்தான் அதிகாரத்தை கையாளவேண்டும் என்ற வகையில் அவர்கள் சிந்திக்கின்றனர். மட்டுமல்லாமல் எங்களுக்கு எதிராக புறக்கணிப்பு, வெறுப்பு, தவறான வதந்திகளைப் பரப்புதல் அதாவது புறகூறுதல் சந்தேகம் போன்ற இஸ்லாத்திற்கு மாறான செயல்களில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆகவே இவையனைத்தும் அல்லாஹ்வின் போதனைகள் அல்ல என்பதை ஒரு முத்தக்கி காண்கிறார். எனவே அத்தகைய பாவத்தில் வீழந்துவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் அந்த வட்டாரத்தை விட்டு வெளியேறுகின்றனர்.

**நீங்கள் சூர : ஹுஜுராத் படிக்கும் போது, அதில் அல்லாஹ் கூறுகிறான். நம்பிக்கை கொண்டவர்களே, (யார் மீது ஈமான்?) அல்லாஹ்வின் மீது நம்பிக்கை, அவனது கட்டளைகள் மீது நம்பிக்கை மற்றும் அவனது அறிவுறுத்தல்கள் மீது**

**நம்பிக்கை கொண்டவர்கள் யார்? அல்லாஹ் உங்களிடம் கூறுகிறான். சந்தேகங்களை தவிர்த்துவிடுங்கள், இதுபோன்ற சந்தேகங்கள், ஐய உணர்வுகள் போன்றவற்றில் அதிகபட்ஷமும் உங்களை பாவங்களில் அழைத்து செல்கிறது. இது மிகவும் கெட்ட பழக்கமாகும். இதிலிருந்து நீங்கள் விடுபெறவேண்டும். உண்மையில் சந்தேகங்களில் சிலது பாவமாகிறது.**

மக்களை மிகவும் சந்தேகிக்கும் கெட்ட பழக்கத்தைக் கொண்டவர்களும் உள்ளனர். இது மிகவும் ஆபத்தானது. பிறரின் தனிப்பட்ட விஷயங்களை அறிந்து கொள்ள அவர்கள் அநேக கேள்விகளை முன்வைக்கின்றார்கள். பிறரின் எல்லாவற்றையும் விரிவாக அவர்களுக்கு அறிந்து கொள்ள வேண்டும். அவர்களின் அச்செய்கையானது மிகவும் வேதனை விளைவிப்பதாகும். மேலும் அவர்களின் சொந்த விஷயங்களைப்பற்றி யாருக்கும் தெரியப்படுத்தாமல் கவனித்துக் கொள்கின்றனர். அதேகணம் மற்றவர்களின் அனைத்து காரியங்களைக் குறித்தும் தெரிந்துக் கொள்ள அவர்கள் விரும்புகின்றனர்.

இவ்வாறு, அவர்கள் மற்றவர்களை உளவுபார்கின்றனர். உளவுபார்த்ததிலிருந்து கிடைத்த தகவல்களை அவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களிடம் பரப்புகின்றனர். மேலும் அவர்கள் அவ்விஷயங்களை மிகைப்படுத்தி மோசமாக்குகின்றனர். இவ்வாறாக அதிகாரப்பூர்வமற்ற வழிகளில் தெரிந்துக் கொண்டதைப் பரப்புவதில் மும்முரமாக பங்கேற்கின்றனர். இவ்வழியில் அவர்கள் மக்களை வெறுப்பு, சண்டை மற்றும் சச்சரவுகளின் பக்கம் தூண்டுகின்றனர். சந்தேகம் கொள்வது, உளவு பார்ப்பதோடு ஓர் ஆழமான தொடர்பைக் கொண்டிருப்பதால் இது மிகவும் கொடிய பாவமாகும். மேலும் இத்தகைய மக்கள், சந்தேகம் என்னும் நோய்வாய்ந்த நபர்கள், உளவுபார்ப்போர்கள் மிகவும் ஆபத்தானவர்கள்.

மற்றொரு புறம், பாருங்கள் ஒரு நல்ல நபர் குளித்து விட்டு சுத்தமான ஆடைகளை அணிந்துக் கொள்வார். அவர் எல்லா வகையான அசுத்தங்கள், தூசி மற்றும் தவறான தீய பரிவத்தனைகளிலிருந்து வெகு தொலைவில் இருக்க தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வார். சுத்தமாக இருப்பதன் மிதிப்பை அவர் உணர்ந்திருப்பதால் தன்னை அவர் சுத்தமாக வைத்திருக்கிறார். எனவே அதைபோல் நீங்கள் உங்களின் நம்பிக்கையையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சந்தேகம், உளவுப்பார்வை மற்றும் புறங்கூறுதல்களிலிருந்து நீங்கள் வெகு தொலைவில் இருக்க வேண்டும். உங்களின் முன்பாக ஓதிய சூரா : ஹுஜுராதின் அவ்வசனம் குறிப்பாக நினைவூட்டுகிறது, யாரையும் நீங்கள் புறங்கூறாதீர்கள், எவரையும் மோசமாக பேசாதீர்கள்

அதாவது அவர் இல்லாத நேரத்தில் அவருக்கு எதிராக பேசாதீர்கள். சந்தேகம், அவநம்பிக்கைப் போன்ற பழக்கங்களை கொண்டுள்ள மக்களும் இருக்கின்றனர். உளவு பார்க்க பழகியவர்கள் மிக விரைவில் ஒரு முடிவுக்கு வருகின்றனர். அதாவது இன்னின்ன விஷயங்கள் நடந்திருக்கலாம் என்று அவர்கள் விரைவான முடிவுக்கு வந்துவிடுகின்றனர். மேலும் உளவு பார்த்து பழகிய, அந்த வகையான நபர் தனது எல்லா அவநம்பிக்கைகளிடனும், சந்தேகங்களுடனும் தன்னை பாவங்களில் மிக ஆழமாக புதைத்துக் கொள்கிறார். இது மிகவும் ஆபத்தானது. அதனால்தான் தஜஸ்ஸுஸ் (உளவுபார்த்தல்) போன்ற தீமைகளுக்கு எதிராக சூரா: அல் ஹுஜுராத்தில் [49 - ம் அத்தியாயம்] அல்லாஹ் நமக்கு எச்சரிக்கை விடுத்துள்ளான்.

தஜஸ்ஸுஸ் என்ற வார்த்தையின் பொருள், பிறரின் குறைபாடுகளை தேடுவது என்பதாகும். தனது சக சகோதரனின் குறைபாடுகளை தேடுவதில் அவர் மகிழ்ச்சியடைகிறார். பிற மக்களின் குறைபாடுகளை தேடும் அத்தகைய நபர்களின் மனதில் ஒரு திட்டமான குறிக்கோள் உள்ளது. அத்தகைய நபர்கள் தங்கள் சகோதரர் அல்லது சகோதரி மீது ஆழ்ந்த வெறுப்பைக் கொண்டிருப்பார்கள். ஆனால் அதை அவர்களிடம் வெளிப்படுத்தாமல், மறைத்து வைத்திருப்பார்கள். அதற்கு பிறகு இரகசியமாக அவர்களின் குறைப்பாடுகளைத் தேட உளவு பார்க்கிறார்கள். பின்னர் அதிலிருந்து பெறும் தகவல்களைக் கொண்டு அவர்கள் அவருக்கு அல்லது அவளுக்கு எதிராக புறங்கூற பயன்படுத்துகிறார்கள். இந்த நிலைமை மேன்மேலும் சீர்கேடை அடைகிறது. அதன் முடிவு மிக மோசமாக அமைகிறது. பொதுவாக கூறினால், ஒரு தாய் தன் பிள்ளைகளை புறங்கூறுபவராக நீங்கள் ஒருபோது பார்க்க மாட்டீர்கள். அல்லது பிள்ளைகள் பெற்றோரை புறங்கூறுவதை நீங்கள் ஒருபோது பார்க்க மாட்டீர்கள். ஆனால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எதிராக புறங்கூறுபவர்களாகவும், நேர்மாறாகவும் நிகழ்ந்தால், இது போன்ற சூல்நிலைகள் இருந்தால், உறவுகளில் ஏற்படும் இத்தகைய மீறல்களை பைத்தியகாரத்தனத்திற்கு சமமானவை என்று மட்டும்தான் அர்த்தம் கொள்ள முடியும். ஒருவருக்கு எதிராக நீங்கள் புறங்கூறினால் அவரை நீங்கள் விரும்பவில்லை என்று அர்த்தம் அல்லது நீங்கள் அவரைப் பார்த்து பொறாமைப்படுகின்றீர்கள் என்பதாகும். அத்தகைய வெறுப்பும் பொறாமையும்தான் அவரை சந்தேகத்துடன் புறங்கூறுபவனாக மாற்றிக் கொள்கிறது. நீங்கள் இதற்காக முதலில் அவரை உளவு பார்க்க முன்வருகின்றீர்கள். ஆனால் **நீங்கள் உளவு பார்க்கின்ற கண்ணோட்டத்தில் காண்கின்றயாவும் உண்மையாக இருப்பதில்லை. நீங்கள் அவரைப்பற்றி கருதிக்**

**கொள்கின்ற காரியமானது அவர் நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். அவரைப்பற்றிய உங்கள் சந்தேகம் மற்றும் உளவு பார்க்கின்ற கண்ணோட்டமானது, தவறான எண்ணங்களுக்குள்ளையே உங்களை புகுத்திவிடுகிறது.**

அதைப்பற்றி இப்போது சற்று சிந்தித்து பாருங்கள். அத்தகையவர்கள் உளவு பார்க்கும் போது, சந்தேகத்தின் நிழலில் அகப்பட்டு முடிவுகளை எடுக்கின்றனர். எப்போதாவது அவர்கள் உண்மையில் ஏதாவது பார்த்தால் கூட அவர்கள் பரப்புகிற செய்தி பொய்யாகத்தான் இருக்கும். அதாவது அவர்கள் காணாததை கண்டதாக விவரிப்பார்கள். ஏனெனில் அவர்களின் அந்த சந்தேகம் மற்றும் உளவு பார்வை முதன்மையாக ஒரு தீய நோக்கத்தின் அடிப்படையில்தான் தொடங்கியது. அதனால் அவர்கள் சென்றடையும் எந்த முடிவுகளும் மிக மோசமாகத்தான் இருக்கும். அது குறித்து அவர்களுக்குகூட எந்த உறுதியும் இருக்காது. நீங்கள் அத்தகையில் தவறான தகவல்கள் மற்றும் பொய்களை மட்டுமே பரப்ப முயற்சிக்கின்றார்கள். இதைபோன்ற சூல்நிலைகளில் அதாவது அத்தகைய பாவங்களில் ஈடுபடுவதில் நீங்கள் மகிழ்ச்சியடைகின்றார்கள். உண்மையில் புறங்கூறுபவர் ஒரு புதிய உளவியல் உலகில் மூழ்கி வாழ்கிறார். மேலும் இத்தீய செயலானது மனித இயல்பில் படிப்படியாக நுழைகிறது என்பதைத் திருக்குர் - ஆன் குறிப்பிடுகிறது. ஆனால் மக்கள் மற்றவர்களைப் புறங்கூறுவதற்கான ஓரே காரணம் இது மட்டுமென கூற முடியாது. இது தவிர வேறு எந்த விதமான புறங்கூறுதலும் இல்லை என்றும் இதற்கு அர்த்தமில்லை. ஒருபோதும் சந்தேகமில்லை, பிற வகையான புறங்கூறுதலும் உள்ளன. எடுத்து காட்டாக ஒருவரின் தவறுகளை நீங்கள் ஏற்கனவே அறிந்திருக்கின்றீர்கள் என எண்ணுவோம் அதாவது அவருடைய பலவீனம் மற்றும் குறைபாடுகளை அறிய நீங்கள் எந்தவிதமான உளவு பார்த்தலும் செய்யவில்லை. அத்தகைய சந்தர்ப்பத்தில் அவருடைய அந்த பலவீனம் மற்றும் குறைபாடுகளை நீங்கள் வெறுப்புடன் பார்கும் போது, இந்த குறைபாடுகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவருக்கு உதவுவதற்கு பதிலாக மற்றவர்கள் அவரிடமிருந்து தூர விலகி நிற்கும் வகையில் நீங்கள் பிரச்சாரம் செய்தால், அத்தகைய செயலும் கீப்பத்தாகும். ஏனெனில் அந்நபரின் குறைபாடுகளுக்கு எதிரான உங்கள் வார்த்தைகள் காரணமாக அவர் மீது மற்றவர்களுக்கு பகமையை உருவாக்க நீங்கள் முற்படுகின்றீர்கள். அதற்காக மக்கள் உங்களை பாராட்டுவார்கள் என்றும் நீங்கள் செய்ததை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்றும் நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள். இந்த வகையான தீய நோக்கங்களுடன் மக்கள், உண்மையை அடிப்படையாக கொண்ட தகவல்களை பேசுவதன் வழியாக கீப்பத்து செய்பவர்களாகமாறி விடுகின்றனர். எனவே

நோக்கம் மோசாமாகவும் தீயதாகவும் இருக்கும் போதுதான் இதுபோன்ற பேச்சுக்கள் புறங்கூறுதலாக பரிணமிக்கிறது. அது உண்மையான தகவல்களாகயிருந்தால் கூட! ஆனால் உங்கள் நோக்கம் அதாவது உங்கள் நிய்யத்து நல்லதாகயிருந்தால் அது ஒரு பாவம் அல்ல.

ஒரு முறை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது ஒரு மனைவியின் முன்னிலையில் வைத்து யாரோ ஒருவரைக் குறித்து சில காரியங்களை குறிப்பிட்டார்கள். திரு நபி (ஸல்) அவர்கள் அதை சொன்னபோது, அவர் ஏன் அப்படிச் சொன்னார் என்று மனைவி கேள்வி எழுப்பினார்? அந்த நபர் அங்கு இல்லாததால் அது புறங்கூறுதலாகிவிட்டது என்று மனைவி ஆச்சரியப்பட்டார். நாம் ஒரு காரியம நன்கு புரிந்திருக்க வேண்டும். அதாவது அல்லாஹ்வின் பார்வையில் உயரிய நிலையை அடைந்துள்ளவர்கள் ஒருவரைப் பற்றி மற்றொரு நபரின் முன்னிலையில் எதையாவது குறிப்பிடும் போது, அந்த நபரின் பார்வையில் பகை அல்லது வெறுப்பை உருவாக்காமல் அதை எவ்வாறு மற்றவர்கள் முன்னிலையில் சொல்வது என்று அவர்களுக்கு நன்கு தெரியும். அதை அவர்கள் அவ்வாறு செய்கின்றார்கள். உண்மையை அடிப்படையாகக் கொண்டு அதை அவர்கள் கூறுகின்றார்கள். மற்றவர்களுக்கு கல்வியை வழங்குவதற்கும், நல்ல ஆலோசனைகளை அளிப்பதற்கும், முன்மாதிரியாக அதை எடுத்துக் கொள்வதற்குமான ஒரு வழிமுறையாக அதை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அந்த நபரிடம் மற்றவர்களுக்கு வெறுப்பு, சந்தேகம், மோதல் மற்றும் கலவரங்களை உருவாக்குவதற்கான வழிமுறையாக அது ஒருபோதும் அமைவதில்லை.

மாறாக, **இத்தகைய எடுத்துக்காட்டுகள் மற்றும் அறிவுரைகள் மூலம் (நல்லடியார்கள், நபிமார்கள்) அமைதி, சாந்தி மற்றும் அன்பினை மற்றவர்களிடம் உருவாக்குகின்றனர். அண்ணல் நபிகள் நாயகம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் ஒருபோதும் கீப்பத்து அதாவது புறங்கூறுதலில் ஈடுபட்டதேயில்லை என்பதை நான் உறுதியுடன் இத்தருணத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அன்னாரின் பேச்சுவார்த்தைகளுக்கு பின்னால் எந்த ஓர் தீய நோக்கமும் இருந்ததில்லை. அன்னாரின் பேச்சுகள் யாவும் அல்லாஹ்வின் பார்வையில் புறங்கூறுதலாக அமைவதில்லை.**

எனவே நான் இன்று இங்கே இவ்விஷயத்தை நிறைவாற்றுகிறேன். வருகின்ற வெள்ளிக்கிழமை பேருரையிலும் இவ்விஷயத்தை தொடர்ந்து பேசிக்கொள்வேன் இன்ஷா அல்லாஹ். இது உண்மையில் மிக விரிவான மற்றும் முக்கியத்துவமுள்ள ஒன்றாகும். இது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் அனைத்து உறுப்பினர்களும் மட்டுமல்லாமல்

ஒட்டுமொத்தமாக ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தை சார்ந்த மக்களும் நன்கு புரிய வேண்டிய ஒரு பாடமாகும்.

இத்தகைய தீமைகளுக்கு எதிராக அல்லாஹ் நாம் அனைவரையும் பாதுகாப்பானாக! ஆமீன். அல்லாஹ் உங்களை நேர்மையான பாதையில் நீதியுடனும் தக்வாவுடனும் வழிநடத்திக் கொள்வானாக! கீப்பத்து மற்றும் தஜஸ்ஸுசிலிருந்தும், அதைப் போன்று இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்று அனைத்து தீமைகளிலிருந்தும், திருக் குர் - ஆனில் குறிப்பிடப்படுள்ள ஒட்டுமொத்த தீமைகளிலிருந்தும் வெகு தொலைவில் இருக்க அல்லாஹ் நமக்கு உதவிபுரிவானாக! இன்ஷா அல்லாஹ் ஆமீன்.

Translated by:

*Naib Amir* ***Azim Ahmad***
***&***
*Naib Amir* ***S.H Faisal***